ஏற்றம் காரணமாக டிரான்ஸ்போர்ட் சார்ஜ் அதிகமாகி தக்காளி 2 ரூபாய்க்குத்தான் கிடைக்கிறது, கத்திரிக்காய் 1 ரூபாய் 80 காசுக்குத்தான் கிடைக்கிறதே தவிர அதற்குக் குறைவாக இல்லை. எனவே அது தவறான தகவல் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இந்தப் புள்ளி விவரங்கள் பல இடங்களில் சென்று விசாரித்து நவம்பர் 23-ம் தேதி வரை உள்ள விலைகள் ஆகும். நாங்கள் புள்ளி விவரம் சேகரித்த இடங்களில் நீங்களும் சென்று விசாரித்தால் நிச்சய மாக அந்த விலைக்குக் கிடைக்கும். இந்தப் புள்ளி விவரங்கள் சரியானவை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(3) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1973-ம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு வாடகை வண்டிகள் (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு வாடகை வண்டிகள் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1973 நவம்பர் 27

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(4) 1973-74-ம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை நிதி நிலை அறிக்கை மீது பொதுவிவாதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1973-74-ம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை நிதி நிலை அறிக்கையின் பேரில் விவாதம் முடிந்து 1 மணிக்கு வாக்கெடுப்பு நடத்த வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் பேசி பிறகு முதலமைச்சர் அவர்கள் பேச வேண்டும். ஆகவே உறுப்பினர்கள் சுருக்கமாகத் தங்களுடைய கருத்துக்களைக் கூற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 12-40 மணிக்கு முதலமைச்சர் அவர்கள் பதிலளிப் பார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, 1973-74-ம் ஆண்டு முதல் துணை மதிப்பீட்டின்மீது சில கருத்துக்களைக் கூற விரும்பு கிறேன். ஏறத்தாழ 7.67 கோடி ரூபாய் அளவில் துணை மதிப்பீடு தயார் செய்து இந்த மாமன்றத்தின் அனுமதிக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கு கொடுத்துள்ளார்கள். இந்தத் துணை மதிப்பீட்டைப் பொறுத்த அளவில், விரும்பத்தக்க பல அம்சங்கள், தேவைகளுக்காகப் பணம் கோரப்பட்டிருந்தாலும் கூட, சில அம்சங்கள் தேவையற்ற அளவிலே இருக்கின்றன என்பதை முதற்கண் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்தத் தருணத்தில் பெரிய விவாதமாகத் துணை மதிப்பீட்டின் மீது விவாதம் நடத்த இயலவில்லை என்றாலும் கூட அரசாங்கத் தில் இருக்கும் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டப் பயன்படுகிறது என்ற வகையில் நான் சில குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி அரசாங்கம் அவற்றைத் திருத்திக் கொள்ள முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.